# கலைஞர் ஆட்சியில் மகளிர்மேம்பாடு





# கலைஞர் ஆட்சியில் மகளிர் திட்டம்

# கலைஞர் ஆட்சியில்

# மகளிர் திட்டம்

நாட்டு விடுதலைக்காகப் போராடிய அண்ணல் காந்தியடிகள், சுதந்திர தாகத்தை நம் பாரத மக்களிடையே உருவாக்க முனைந்த அதே கால கட்டத்திலேயே பெண்ணுரிமை பேணப்பட வேண்டுமென்பதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். "பொறுமையின் சிகரமான நம் பெண்கள், வம்சாவழியாக, பல நூற்றாண்டுகளாக, உரிமையற்றவராக – அவர்களது சக்தியின் ஆற்றலை உணராதவர்களாக, வெறும் இயந்திரங்களாகச் சுழன்று வருகிறார்களே" என்று பல்வேறு கட்டங்களில் அவர் தன்னுடைய ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

**அண்ணல் காந்தியடிகளினால்** குறிப்பிடப்பட்டுள்ள இத்தகு அவலநிலையை மாற்றிப் பெண்களை, அதிலும் குறிப்பாக கிராமப்புற ஏழைப்பெண்களை சமூகப் பொருளாதார ரீதியில் நிலை உயர்த்திட வேண்டுமென்ற அடிப்படையில், **கலைஞர் அரசு** பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. அதில், மிகவும் குறிப்பிடத்தக்க திட்டமாக **மகளிர் திட்டம்** விளங்குகிறது.


கிராமப்புறங்களிலுள்ள ஏழை, எளிய மகளிரைக் கண்டறிந்து, அவர்களை ஒருங்கிணைத்து, ஒரு குழு அமைப்பிற்குள் கொண்டு வந்து, அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளையளித்து, சுயதொழில் தொடங்கிட மானியத்துடன் கூடிய கடனுதவிகளும் அளிக்கப்படுகின்றன.

ஏழ்மையில் வாடும் குடும்பங்களின் பொருளாதாரச் சுமையைப் பெண்களும், ஆண்களும் பகிர்ந்து கொள்ளும் அந்தச் சமநிலை உருவாகிடும் பொழுது, ஆணுக்குப் பெண் தாழ்ந்தவளல்ல; இருவரும் இணையே என்ற இனிய நிலை, இத்திட்டத்தின் வாயிலாக எய்தப்படும் என்பது உறுதியே!

ஒரே கிராமத்தை சேர்ந்த ஆர்வமிக்க
ஏழை பெண்களை ஒன்று சேர்த்து 12 முதல்
20 உறுப்பினர்கள் கொண்ட
சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கம்.




கிராமப்புறங்களில் வாழும் மிகவும் ஏழ்மை
நிலையில் உள்ள ஆதரவற்ற பெண்களின்
சமூக – பொருளாதார
முன்னேற்றத்திற்கான
சுயஉதவிக் குழுக்கள் அமைப்பு.




60,000 சுயஉதவிக் குழுக்கள் மூலம்
பத்து இலட்சம் மகளிரின் சமூக மற்றும்
பொருளாதார மேம்பாட்டை
உறுதிசெய்து பெண்களைச்
சுயசார்பு பெற்றவர்களாக
ஆக்கிட இலக்கு.


தமிழ்நாடு மகளிர்
மேம்பாட்டு நிறுவனத்தால்
அங்கீகாரம் பெற்றத்
தொண்டு நிறுவனங்கள்
கிராமங்களுக்குச் சென்று,
புள்ளி விவரங்கள்
சேகரித்து,
வறுமைக்கோட்டின் கீழ்
வாழும் பெண்களைக்
கண்டறிந்து, அவர்களை
குழுவாக ஒருங்கிணைத்து,
மேலும் அவர்கள்
மேற்பார்வையில்
பலவிதமான பயிற்சிகள்
அளிப்பு.






தகுதியுள்ள பெண்களை
ஊக்குநராகவும்,
பிரதிநிதிகளாகவும்
தேர்ந்தெடுப்பதோடு,
குழுக்களை ஜனநாயக
முறையில் அமைத்து,
அனைவரும் கலந்துபேசி
கூட்டு தீர்மானங்கள்
நிறைவேற்றம்.

சேமிப்பு, அதன் அளவு, சந்தாத் தொகை, குழுக் கூட்டத்தில் முடிவு; குழுப் பெயரில் அருகாமையிலுள்ள வங்கியில் சேமிப்பு கணக்குத் தொடக்கம்.






சங்கத்தின் வளர்ச்சிக்கேற்ப சங்கக் கடன் அளவு, வட்டி, திருப்பிச்செலுத்தும் தவணைமுறை ஆகியவற்றை குழுவே நிர்ணயித்து, அவசர தேவைகளுக்கு முன்னுரிமை அளித்து, கடன் தேவைப்படும் உறுப்பினருக்குத் தீர்மானம் நிறைவேற்றி கடன் வழங்கல்.



கந்து வட்டிக்காரனிடம் பொருட்களை அடமானம் வைத்து, அதிக வட்டியில் கடன் பெற்று, கடனை அடைக்க முடியாமல் அல்லல்பட்டுவந்த நிலைமாறி, சுழற்சி முறையில் குழு சேமிப்பிலிருந்து கடன் பெற்றுத் தொழில் தொடங்க வாய்ப்பு.

குறைந்தபட்சம் ஒரு வருடமாவது நன்றாக செயலாற்றிய பின், வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்கள் மூலம் கடனுதவிபெற, குழுக்கள் தகுதி பெறுகின்றன.


மாதாமாதம் வட்டார அளவிலான ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் அனுபவ பகிர்வு.




சிறப்பாகச் செயல்படும் குழுக்கள் அரசின் திட்டங்கள், ஸ்வர்ண ஜயந்தி கிராம ஸ்வரோஜ்கார் யோஜனா, தாட்கோ போன்ற திட்டங்கள் மூலம் பயனடைய உதவி செய்யப்படுகிறது.



மாடு வளர்த்தல், கோழி வளர்த்தல், ஆடு வளர்த்தல், கூடை பின்னுதல், பூந்தோட்டம் அமைத்தல் போன்ற பல தொழில் செய்ய முனைவோர்க்கு அதற்கான பயிற்சியும் முறையே அளிக்கப்படுகிறது.



8 மாவட்டங்களில் மட்டுமே செயல்பட்டுவந்த ஐஃபாட் (IFAD) திட்டத்தின் சீர்மிகு செயல்பாடுகளைக் கருத்தில் கொண்டு 1996–97ஆம் ஆண்டு தமிழக அரசால் 'மகளிர் திட்டம்' என்ற திட்டம் மாநிலம் முழுவதும் செயல்படுத்த முடிவு. இத்திட்டத்தின் கீழ் தாழ்த்தப்பட்டோர், கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்டோர், ஊனமுற்றோர் போன்றவர்களுக்கு முன்னுரிமை.







குழந்தைகளைத் தவறாமல் பள்ளிக்கு அனுப்புதல்;

சாதி–மத வேறுபாடுகளைக் களைந்து ஒற்றுமையாகச் செயல்படுதல்;


சுற்றுப்புறங்களைத் தூய்மையாக பேணுதல்.





சிசுவதை தடுப்பு, வரதட்சிணை எதிர்ப்பு,
கூட்டத்தில் உறுதிமொழி எடுத்தல்.

கிராம சபைக் கூட்டங்களில்
தவறாது கலந்துகொண்டு,
கிராம வளர்ச்சிக்கு
ஒத்துழைப்பு கொடுத்தல்.



கிராமசபைக்
கூட்டங்களில் பல
பெண்கள்
பங்கேற்று, கிராம
நலப்பணிகளில்
உதவ
முன்வந்துள்ளனர்.




மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட திட்ட ஒருங்கிணைப்புக் குழு இருமாதங்களுக்கு ஒருமுறை கூடி, சுயஉதவிக் குழுக்களின் வளர்ச்சிக்காக புதிய திட்டங்கள் மற்றும் வழிமுறைகளை விவாதித்து செயல்பாடுகளை ஆராய்ந்து ஊக்குவிக்கிறது. இதுதவிர ஒவ்வொரு மாவட்டத்திலும் மகளிர் திட்டத்தில் பங்கேற்கும் தொண்டு நிறுவனங்களின் மாத ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டு குழுக்களின் வளர்ச்சிக்கான அறிவுரை வழங்கப்படுகிறது.


சுயஉதவிக் குழுக்கள் சாதனைகள், பல்வேறு நடவடிக்கைகள், மேலும் பெண்களுக்கான அரசு திட்டங்கள், உடல்நலம் மற்றும் சுகாதாரம், சுற்றுப்புறம் பேணுதல் போன்ற அனுபவப் பகிர்வுகளுக்காக 'தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்' என்ற பத்திரிகை மாதாமாதம் வெளியிடுப்படுகிறது. இலவசமாக குழுக்களுக்கு வழங்கப்படுகிறது. குழு உறுப்பினர்கள் தங்கள் அனுபவங்கள், குறிப்புகள் மற்றும் சிறு கவிதைகள் முற்றத்திற்கு அனுப்பி தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி அனுபவப்பகிர்வு பெற்று மேம்பாடு அடைந்து வருகின்றனர்.




மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மகளிர்நல மேம்பாட்டு நிறுவனத்தின் திட்ட செயலாக்க அலுவலகம், ஒரு திட்ட அலுவலர் தலைமையில் செயல்பட்டு வருகிறது.





இத்திட்டத்திற்காக, கலைஞர் ஆணையில் கடந்த ஆண்டு ரூ.8 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஆண்டில் ரூ.32.82 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.



மகளிர் திட்டத்தின் முன்னோடியான ஐஃபாட் திட்டத்தின் மூலம் 5,207 சுயஉதவிக் குழுக்கள் 31–12–1998 வரை அமைக்கப்பட்டன. இதன்மூலம் 1,20,960 ஏழைப்பெண்கள் குழுக்களில் சேர்ந்து பயனடைந்து வருகின்றனர். அதில் 90,470 பெண்கள் வங்கி மூலம் ரூ.53.83 கோடி கடன் உதவி பெற்றுள்ளனர். ரூ.30.44 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மொத்தமாக ரூ.84.27 கோடிக்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.



இந்த திட்டத்தின் சீர்மிகு செயல்பாடுகளைக் கருத்தில் கொண்டு ஐஃபாட் திட்டம் மகளிர் திட்டத்துடன் இணைக்கப்பட்டு, 28 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.



31–10–1999 வரை 19,485 சுயஉதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் 3,71,216 பெண்கள் சேர்ந்து பயனடைந்து வருகிறார்கள். இவர்கள் மகளிர் மற்றும் கிராம முன்னேற்றத்திற்காக பாடுபட்டு வருகின்றனர்.


course conducted by ETDC, Chennai